# காரைக்கால் துறைமுகத்தில் குடியரசு தின விழா...



காரைக்கால் துறைமுக வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற குடியரசு தின கொண்டாட்டத்தின்போது மரக்கன்று நடுகிறார் துறைமுக செயல் அதிகாரி கேப்டன் கே.என். ரமேஷ். முன்னதாக, தேசியக் கொடியை ஏற்றி வைத்து, துறைமுக பாதுகாவலர்களின் அணிவகுப்பையும், அவர்களின் சாகசங்களையும் ரமேஷ் பார்வையிட்டார். இதில் துறைமுகத்தின் பல்வேறு நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.